## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு பொறியியல் கல்லூரிகள் – W.P.No.3412/2008 – திருமதி ரஹிலா பிலால், தேர்வுநிலை விரிவுரையாளர் (மின்னணு (ம) தொடர்பியல்), தந்தை பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரி, வேலூர் மற்றும் திருமதி டி.பத்மினி, தேர்வுநிலை விரிவுரையாளர், அமைப்பியல், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை, ஆகியோர் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 9.7.2009 நாளிட்ட தீர்ப்பு – செயல்படுத்துதல்– அரசு பொறியியல் கல்லூரிகளில் பணியாற்றும் 31 உதவிப்பேராசிரியர்கள் பணியினை அவர்கள் முதலில் ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண்:255

நாள்: 22.12.2016
துன்முகி, மார்கழி:7
திருவள்ளுவர் ஆண்டு 2047
படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.232, உயர்கல்வித் (சி2) துறை, நாள்.2.5.1997.
2. நீதிப்பேராணை மனு எண். 3412/2005–ல், சென்னை, உயர்நீதிமன்றம் வழங்கிய 9.7.2009 நாளிட்ட தீர்ப்பு.
3. அரசாணை (நிலை) எண்.514, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.14.12.2005.
4. முதன்மைச் செயலாளர் / தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.5823/ ஏ2 /2008, நாள் 29.10.09 மற்றும் 5.7.2012.
5. அரசாணை (நிலை) எண்.167, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.6.8.2012
6. அரசு கடித எண்.12526/இ1/2008–2, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.23.10.2012, 30.4.2015 & 19.02.2016.
7. முதன்மைச் செயலாளர் / தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மற்றும் இயக்குநரின் கடித எண்.5823 / ஏ2/2008, நாள் 08.04.2015, 6.11.2015 மற்றும் 3.5.2016.

---

**ஆணை:–**

முதன்மைச் செயலாளர் / தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், 1986 முதல் 1990ஆம் ஆண்டுகளில் அரசினர் பொறியியல் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்த ஆசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தால், தகுதியடிப்படையில் அவர்களில் 67 விரிவுரையாளர்களை தெரிவு செய்து, அவர்களது பணியை 2.5.97 முதல் வரன்முறைப்படுத்தி மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வழங்கப்பட்டது என்றும், அவர்களது பணி 2.5.97 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டதை எதிர்த்து, மேற்குறிப்பிட்ட 67 விரிவுரையாளர்களில் 15 விரிவுரையாளர்கள் அவர்களை ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளராக முதலில் நியமனம் செய்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தக் கோரி தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்தனர் என்றும், அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் ஆணையின்படி, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி 15 நபர்களின்

பணியை அவர்கள் விரிவுரையாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டது என்றும், இவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்படும் பணிக்காலம் குறிப்பிட்ட ஓய்வூதிய பணப்பயன்களுக்கு மட்டுமே கணக்கில் கொள்ளப்படும் எனவும், இப்பணிக்காலம், ஊதிய நிர்ணயம், ஊதிய நிலுவைத் தொகை மற்றும் முதுநிலை கோர கணக்கில் கொள்ளப்பட மாட்டாது எனவும், இவர்கள் தற்போது பெற்று வரும் ஊதியத்தையே தொடர்ந்து பெறவேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், தற்போது மீதமுள்ள 52 விரிவுரையாளர்களில், பெரும்பாலோர் தங்களையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்துமாறு விண்ணப்பித்த வண்ணம் உள்ளனர் எனவும், திருமதி.ரஹிலா பிலால், மற்றும் திருமதி.டி.பத்மினி, ஆகிய இருவரும் தங்களது பணியை 2.5.1997 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டதற்கு பதிலாக அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய காலத்தையும் வரன்முறைப்படுத்தி அக்காலத்திற்குரிய ஊதியம் மற்றும் இதர பயன்களை வழங்கக் கேட்டு W.P.No.3412/2008–ல் வழக்குத் தொடர்ந்தனர் என்றும், அவ்வழக்கில் 9.7.2009 அன்று வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணையில் மனுதாரர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய வழியாக விண்ணப்பிக்கும்படியும், அவ்விண்ணப்பத்தை பெற்ற 12 வாரங்களுக்குள் விதிகளின்படியும், தகுதி அடிப்படையிலும், அதனை அரசு பரிசீலிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி, மனுதாரர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டன என்றும் தெரிவித்து மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் இவ்விரு தனியர்களின் முறையீடுகளை பரிசீலித்து தக்க ஆணைகள் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இந்நிலையில் இதே போன்று மேலும் 5 விரிவுரையாளர்கள் (தற்போது உதவிப்பேராசிரியர்), அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்ய கோரி தொடுத்த வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் செல்வி ஜி. ராதிகா, திரு.கே.ஜே.பூரணசெல்வன், திருமதி.சா.லெட்டிஷியா மற்றும் செல்வி வே.கீதா ஆகிய 4 விரிவுரையாளர்களுக்கு மட்டும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டது. அவர்களுள் திரு.ப்பி.மணிவேல் அவர்கள் பணியில் சேர்ந்த நாளன்று கல்வித்தகுதி நிறைவு செய்யாத காரணத்தினால் அன்னாருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

3. எனவே, மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதங்களில், 1986 முதல் 1990 ஆம் ஆண்டுகளில், அரசினர் பொறியியல் கல்லூரிகளில், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் படி, பணிவரன் முறை செய்யப்பட்ட 67 விரிவுரையாளர்களில், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைபடுத்தப்பட்ட 19 விரிவுரையாளர் நீங்கலாக மீதமுள்ள நபர்களில் பணிநியமனம் செய்யப்பட்ட நாள்முதல் முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்த தகுதியான நபர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்ற விவரங்களை உடன் அரசுக்கு அனுப்புமாறு தொழில்நுட்பக் கல்வி, முதன்மைச் செயலாளர் / தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பணிவரன்முறை செய்யப்பட்ட 67 விரிவுரையாளர்களில், மேலே பத்தி ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள 20 பேர் நீங்கலாக (பணிவரன்முறை செய்யப்பட்ட 19 நபர்கள் + திரு.ப்பி.மணிவேல்) மீதம் 47 பேர் உள்ளனர்

...3

என்றும், அதில் 11 விரிவுரையாளர்கள் தொழில்நுட்பக் கல்வித்துறையை விட்டுச் சென்றுவிட்டனர் என்றும், அவர்களைத் தவிர்த்து, தற்போது பணியில் உள்ள கீழ்க்கண்ட 36 உதவிப்பேராசிரியர்களின் விவரங்களை அரசுக்கு அனுப்பி, அவர்களின் பணியினை அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் சேர்ந்த நாள் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்ய ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ. எண் | பெயர், துறை மற்றும் பணிபுரியும் இடம் | கல்வித் தகுதி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | ஜே.ஜெயந்தி, அமைப்பியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 01.08.1990 |
| 2. | பி.கே.பழனி, இயந்திரவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 14.09.1988 |
| 3. | எம்.சேகர், இயந்திரவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 22.11.1990 |
| 4. | கே.மனோன்மணி, இயந்திரவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 16.11.1990 |
| 5. | இ.லதா மெர்சி, மின்னியல், அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 09.11.1988 |
| 6. | எஸ்.கோதை நாச்சியார், மின்னணு (ம) தொடர்பியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 09.01.1991 |
| 7. | சி.சாந்தி, மின்னணு (ம) தொடர்பியல் /அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 26.10.1988 |
| 8. | மீனா சீனிவாசன், மின்னணு (ம) தொடர்பியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 28.12.1990 |
| 9. | எஸ்.சிவகுமார், உற்பத்தியியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | AMIE, M.E | 01.08.1990 |
| 10. | எஸ்.திருசெல்வம், இயந்திரவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர். | B.E, M.E | 31.10.1988 |

...4

| | | | |
|---|---|---|---|
| 11. | ஆர்.விஜயன், இயந்திரவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். | B.E, M.E Ph.D | 04.03.1988 |
| 12. | ஆர்.மலையாள மூர்த்தி, இயந்திரவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். | B.E, M.E Ph.D | 24.02.1988 |
| 13. | டி.நூருல்லா, உலோகவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். | B.E, M.E | 05.02.1991 |
| 14. | என்.தேனம்மை, உலோகவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். | B.E, M.E | 11.02.1991 |
| 15. | எம்.சாந்தி, மின்னணு (ம) தொடர்பியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். | B.E, M.E,Ph.D | 18.10.1988 |
| 16. | ஜி.செல்வமணி, கணிதவியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். | B.Sc, M.Sc., | 07.09.1990 |
| 17. | வ.குமார், அமைப்பியல் / அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. | B.E, M.E | 12.08.1988 |
| 18. | இரா.நாராயணன், இயந்திரவியல் / அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. | B.E, M.E | 19.11.1990 |
| 19. | ஐ.முத்துமணி, மின்னணு (ம) தொடர்பியல் / அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. | B.E, M.E | 17.12.1988 |
| 20. | அ.சிவானந்தராஜா, மின்னணு (ம) தொடர்பியல் / அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. | B.E, M.E | 10.02.1988 |
| 21. | பி.வி.புவனேஸ்வரி, இயற்பியல் / அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. | B.Sc., M.Sc., | 15.12.1988 |
| 22. | சி.மீனா, மின்னணு (ம) தொடர்பியல் / அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி. | B.E, M.E | 08.02.1988 |

...5